**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு மா. சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 17–ம் நாள்
2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02–ம் நாள் சனிக்கிழமை
******

**இடைமனு எண். 10/2024–ல் அசல் வழக்கு எண். 28/2013**

1. நீலாவதி (இறந்தார்)
தனக்காகவும் தனது குடும்ப
உறுப்பினருக்காகவும் குடும்ப
தலைவர் மற்றும் நிர்வாகி என்ற முறையில்
2. சுதா
3. ஐயப்பன்
4. வெங்கடேசன்
5. மோகனகண்ணன்
6. சட்டையப்பன்
7. மீனாட்சி
8. ரகுராமன்
9. பாரதி ராஜா (இறந்தார்)
10. பபிதா
11. பிரவீன் குமார்
12. ராதா
13. மைனர் சிவசங்கரி
14. மைனர் கீர்த்திவாசன்
(மேற்படி 13,14 /மனுதாரர்கள்/வாதிகளுக்காக அவர்களது
தாயாரும் கார்டியனும் பாதுகாவலருமான
12 ம் மனுதாரர்/வாதி மூலம்) .....மனுதாரர்கள்/ வாதிகள்

...எதிராக...

1. கண்ணப்பன் (இறந்தார்)
2. வட்டாட்சியர்
வட்டாச்சியர் அலுவலகம், சீர்காழி.
3. கோட்டாச்சியர்
கோட்டாச்சியர் அலுவலகம், மயிலாடுதுறை.
4. திரு. மாவட்ட ஆட்சியர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்
5. செல்வமணி
6. ரேகா
7. ரேவதி
8. சந்திரபோஸ் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 29.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு E. செல்வராஜ் அவர்களும், 5,6,7,8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு V. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவிட்ட நிலையிலும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சில ஆவணங்களை தாக்கல் செய்வதற்காகவும், அதனை குறியீடு செய்வதற்காகவும், வழக்கு வாதுரைக்காக போடப்பட்டுள்ளதை மறுதிறப்பு (Reopen) செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச.151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்.**

i) மனுதாரர் இந்த மனுவில் 6ம் மனுதாரர் அசல் வழக்கில் 6ம்வாதி ஆவார். முதல் மனுதாரர்/முதல் வாதி தன்னுடைய தாயார், 2,7,10 மனுதாரர்கள் தன்னுடைய சகோதரிகள், 3 to 5, 8 to 9 மற்றும் 11 ஆம் மனுதாரர்கள் தன்னுடைய சகோதரர்கள். இறந்த 9ம் மனுதாரர்/9ம் வாதியின் மனைவி மற்றும் மகன், மகள் 12 to 14 மனுதாரர்கள்/வாதிகள். தாவா வழக்கை 6ம் மனுதாரர் இதர மனுதாரர்களுக்காகவும் அசல் வழக்கையும், இம்மனுவையும் நடத்தி வருகிறார். மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்துக்களை பொருத்து வசம் பரிகாரத்திற்கும், செயல் உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும், விளம்பல் பரிகாரத்திற்கும் மற்றும் இதர பரிகாரங்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார்கள்.

ii) அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சியாடி வருகின்றனர். அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள்

விசாரிக்கப்பட்டு, வழக்கு வாதுரைக்காக 08.03.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் கட்சிக்கு மிகவும் அவசியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைத்தன. அசல் வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் சில ஆவணங்களை தாக்கல் செய்வதற்காகவும், அதனை குறியீடு செய்வதற்காகவும், வழக்கு வாதுரைக்காக போடப்பட்டுள்ளதை மறுதிறப்பு (Reopen) செய்ய உத்தரவிட வேண்டி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

**2. 7ம் எதிர்மனுதாரர்/7ம் எதிர்வாதியால் தாக்கல் செய்யப்பட்டு 5,6,8ம் எதிர்மனுதாரர்களால் தங்களுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–**

மனுதாரர்களின் மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணை மற்றும் எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு அசல் வழக்கானது வாதுரைக்கு போடப்பட்டுள்ள நிலையில், வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்த இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யக்கோரும் ஆவணங்கள் தாவா சொத்துக்கு உண்டான ஆவணங்கள் அல்ல. அவைகள் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சியை ஊர்ஜிதம் செய்ய உதவும் ஆவணங்களும் அல்ல. மனுதாரர்கள்/வாதிகள் இருதரப்பு சாட்சி விசாரணைக்குப் பின் வாதுரைக்கு போடப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கினை Reopen செய்து ஆவணங்களை காலங் கடந்து தாக்கல் செய்து அதனை குறியீடுவதற்காக வழக்கை மறுதிறப்பு செய்யக்கோரியுள்ள இம்மனு அனுமதிக்கதக்கதல்ல. மனுவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் எதுவும் கூறவில்லை. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

5. <u>**தீர்வு:**</u>

i) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் அவர்கள் தரப்பிற்கு ஆதரவான சில ஆவணங்களை தாக்கல் செய்வதற்காகவும், வழக்கு விசாரணை முடிவுற்று வாதுரைக்காக போடப்பட்டுள்ள அசல் வழக்கை வா.சா.1 ஐ மறுபடியும் அழைத்து விசாரித்து மறுத்திறப்பு செய்யக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

ii) 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் தாக்கல் செய்யக்கோரும் ஆவணங்கள் வழக்குச்சொத்து சம்மந்தப்பட்டவைகள் அல்ல என்றும், வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்துவதற்காக இருதரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதுரைக்காக போடப்பட்ட வழக்கை மறுதிறப்பு செய்யக்கோரியுள்ள இம்மனு அனுமதிக்கதக்கதல்ல என்றும், மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டது.

iii) இருதரப்பு கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் விசாரணை எந்தவிதத்திலும் பாதிக்கப்படபோவதில்லை என்பதாலும், இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது து என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து இம்மனுவை செலவுத்தொகை செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில்,** மனுதாரர்கள் செலவுத்தொகையாக ரூ.500/-ஐ, 5 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு 13.08.2025 தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும். தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

**அழைக்க –14.08.2025.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.02 18:17:24 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

| | |
|---|---|
| <u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்</u> | – இல்லை – |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்</u> | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.08.02 18:17:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.10/2024–ல்
அசல் வழக்கு எண்.28/2013
நாள்–02.08.2025.